# விடிவெள்ளி



கவிதைகள்

விலை ரூபா 1-00

மணிவாசக நூல் நிலையம் ★ இடுப்பிட்டி, சன்மார்க்க சபை ★
ஆரம்பம்: 1934



# ‘விடிவெள்ளி’
# கவிதைகள்

வெளியீடு : 25-6-64.

பிரசுரம் :

ஆசீர்வாதம் அச்சகம்,
32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

# அன்றிலின் குரல்

அங்கமெலாந் தங்கமெனத் திகழ்ந்தாய் ; அன்பின்
அலைகடலாய் உந்தனுளந் திறந்தாய் ; வானத்
திங்களெனக் கருணையொளி பொழிந்தாய் ; வாழ்வில்
திசையனைத்தும் சேவைசெயப் பறந்தாய் ; எங்கும்
பொங்குமலர்ப் புன்னகையைச் சொரிந்தாய் ; யேசு
போதனையாம் வாழ்வதனிற் கலந்தாய், இன்று
எங்களுயிர் கவர்ந்தோடி மறைந்தாய் ஐயா !
ஈசனடி நீழலிலே இன்பங் காண்பாய்


"ஜெயம்"

உயர்திரு

# க. பே. முத்தையா அவர்களின்

தோற்றம் : *31-8-1914*

மறைவு *26-6-1964*



# "விடிவெள்ளி"

## திரு. க. பே. முத்தையா

**குடும்பம் :**

தந்தை — க. கந்தையா
தாய் — க. பொன்னுச்சி
மனைவி — மேரி ஜெயமணி
மக்கள் — ஜெபராணி
— ஜெபராசா
— ஜெபதேவி
— ஜெபமலர்
— ஜெப ஆனந்தன்

**தலைமையாசிரிய கடமை :**

1936— வேம்போடு கேணி
1937—47 உடுத்துறை
1948—54 பரி. யோவான் தமிழ்ப் பாடசாலை
1955—64 நல்லூர் சாதன பாடசாலை

**எழுதிய நூல்கள் :**

தமிழ் அறிவு
கட்டுரைக் கதிர்
தமிழ்—சூழற் பயிற்சிகள்
சிலுவையும் செந்தமிழும்

**பத்திரிகாசிரியர் கடமை :**

சமூகத் தொண்டன்

**சமூகத் தொண்டு :**

தலைவர் — இலங்கைத் தமிழ்ப் புத்தக வெளியீட்டுக் கழகம்
உபதலைவர் — இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்
பொருளாளர் — இலங்கைக் கம்பன் கழகம்
தலைவர் — யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கம்

நமது நாட்டின் சமூக வானிலே பல துறைகளில் மின்னிய 'விடிவெள்ளி' மறைந்து விட்டது. க. பே. மு. அவர்களுக்கு 'விடிவெள்ளி' மிகவும் பொருத்தமான புனைபெயர்தான். சமயம், சமூகத் தொண்டு, இலக்கியம் ஆகிய துறைகளிலே பலருக்குப் பல விதங்களில் தனது இதய ஒளியால் ஒற்றுமைப் பாதையைக் காட்டி, செயலிலே வேகத்தை ஊட்டி, கடைசிமட்டும் ஓயாது உழைத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

எல்லா மதங்களினதும் அடிப்படை நோக்கத்தில் ஒருமைப்பாட்டைக் கண்ட அவர் நல்ல கிறிஸ்தவராக வாழ்ந்தார். சிலுவையின் புனிதத்தை செந்தமிழில் எடுத்து உரைத்தார். சமூகத்தொண்டின் பெருமையை தமது உழைப்பாலே காட்டினுர். தனி மனிதனை நேசித்து, தனிக் குடும்பங்களின் நலனிலே அக்கறை காட்டி, சமூகத்தின் ஊழியனுக மாறும் தன்மை அவருக்கு இயற்கையாகவே இருந்தது. க. பே. மு. பிறப்பிலேயே சமூகத்தொண்டன். அவரது மறைவு ஈடு செய்ய முடியாத ஒரு துன்பம் என்பதை உணர்ந்து கொண்டே இருக்கிறோம்.

இலக்கியத்தை அவர் சமூகத் தொண்டின் ஒரு சாவியாகக் கருதினுர். இதமான அவர் கவித்திறமை அவர் தொண்டுக்குத் தொண்டு செய்தது.

அவர் தமிழைப் பிழையறக் கற்றிருந்தார். கவிதையாப்பும் அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. முன்னதனுற் கிடைத்த சொற்கூட்டத்தைப் பின்னதனுற் கிடைத்த யாப்பமைதியோடு பொருத்திக் கவிதைகளை யாப்பதிலே அவர் வல்லவராய் இருந்தார். தமிழ் யாப்பமைதியிலே வெண்பா இயற்றுதல் சற்றுக் கடினமானதென்றே சொல்லலாம். தளை தட்டுதலும், சந்தம் பிழைத்

தலுமாகிய நுட்பமான பிழைகளை அறிந்துகொள்ளுதற்கு வெண்பா ஒரு சோதனைச்சாலை என்றால், அங்கே சித்தியடைந்தவரிலும் தோல்விகண்டவர்களே அநேகம். ஆனால் விடிவெள்ளியின் கவிதைச் சிறப்பு வெண்பாவிலே தான் சுடர்விடுகின்றது. இதிலிருந்து அவரது புலமை, தமிழறிவாலும், யாப்புணர்வாலும் ஏற்பட்டதென்பது நிரூபணமாகும்போது, அவர் இயற்கையுணர்வாற் கவிதையாத்தார் என்ற கூற்று அடிபட்டுப் போய்விடுகின்றது. எனவே க. பே. மு. சிருஷ்டியார்வத்தால் உந்தப் பட்டுக் கவிதையாத்தவர் அல்லர் என்றாகிறது. இதனாலேயே அவரது கவிதைகளை ஆராய்வது சிறிது கடினமான விஷயம் என்று ஆரம்பத்திலேயே சொன்னோம்.

விடிவெள்ளியின் கவிதைகள் தொண்டு உணர்வின் தூண்டுதலால் எழுந்தவை. எனினும் வாசிப்போரின் நெஞ்சங்களை அவை ஈர்க்கத் தவறியதில்லை. மென்மையாக இழையோடிக் கொண்டிருக்கும் நகைச்சுவையும், சொல்லாட்சித்திறனும், அவற்றால் ஏற்படும் ஒரு குழைவும் சேர்ந்து க. பே. முவை நல்ல கவிஞராக ஆக்கி விடுகின்றன.

இயற்கைக் காட்சிகளிலே தன்னை இழந்து அதனோடு ஐக்கியமாகிவிடும் தனித்துவ நிலைக்கும் விடிவெள்ளியின் தொண்டுக் கவிதைக்கும் வெகுதூரம், அவர் தம்மைச் சூழ்ந்துள்ள, மக்களோடும் அவர்களின் இன்பதுன்பங்களோடும் கலந்து கரைந்து போனார். மக்களின் வாழ்வைச் சீர்திருத்துவதிலும், அவர்களது பண்பாடுகளை உயர்த்துவதிலும் தம்மை இழந்துவிட்டார். ஆகவே தான் அவர் இயற்கை ஈடுபாட்டை மறந்து பண்பற்ற இழிசெயல்களைச் சாடுவதிலும், மக்களுக்குப் புத்திசொல்வதிலும், மொழியுணர்வினை வளர்த்தலிலும் தமது கவித்துவத்தைச் செலவு செய்தார். உலகை மறந்த தனிமனித

வாழ்விலும் இயற்கையை மறந்த சமூக வாழ்விலே அதிக கரிசனை கொண்டிருந்தமையால் ஈழத்தின் கவிதை மரபிலே வேறுபட்ட ஒரு புதுத்தன்மையை அவராலே படைக்க முடிந்தது. அந்தப் புதுத் தன்மை செப்ப நுட்பமாய் அமைந்து அவருக்கு ஒரு தனியிடத்தை எடுத்துத் தந்துள்ளது. அது தான் அவரின் சாதனை !

விடிவெள்ளியின் கவியுள்ளம், தனியுணர்வு நிலை அவரது சமயகீதங்களிலே தான் அதிகமாகத் தென்படுகின்றது. தூய்மையான மதநம்பிக்கை நிறைந்த, தமிழறிவின் சாயல் படர்ந்த கவிதைகளை அவரது கிறிஸ்தவ கீதங்கள் முழுமையாக்கித் தந்துள்ளன. கிறிஸ்தவ சமய உலகிலே, தேவாலயங்களிலும், மற்றிடங்களிலும் அவரது செந்தமிழ் ஒலித்தொலித்துக் காலங் கடந்து வாழும் என்பது உறுதி.

விடிவெள்ளியின் இதய ஒலியை, இக் கவிகளின் மூலம் நூலுருவில் உங்கள் முன்பு, சமர்ப்பிக்கின்றோம். இந்நூல் உருவாக உதவிய ஓவியர் திரு. சிவப்பிரகாசம் அவர்களுக்கும், ஆசீர்வாத அச்சகத்தினர்க்கும், எமது நன்றி.

பெற்றோர் ஆசிரியர் சங்கம்,
(நல்லூர் சாதனா பாடசாலை)
இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்,
'விடிவெள்ளி'யின் நண்பர்கள்.

# வணக்கம்

# தேவதேவா

பாவநாவில் பாட்டு வைத்தாய்
தேவதேவா உன்திருவருளை
சீவனிலாத சிறியேன் துதியால்
மேவியுரைக்க விரும்புகின் றேனே



# பூவில் தூதர் பாடினுர்

மண்ணில் இன்பம் சேர்க்கவே
    மாம்சமான துய்யனே
பொன்னின் வீணை மீட்டியே
    பூவிற் தூதர் பாடினுர்.

நொந்து நைந்த பூமிக்கே
    நோவை மாற்றும் தெய்வமாய்
தந்த நல்ல பெத்லகேம
    தாவி தூரின் மேன்மையே

எங்கள் நெஞ்சில் பாலனுய்
    ஏழைக் கோலம் கொள்ளவே
பொங்கும் அன்பின் நேசரை
    போற்றி நின்று வாழ்த்துவோம்

நன்மை அன்பும் வாய்மையும்
    ஞானம் போதம் தூய்மையும்
தன்மை கொண்ட பாலனே
    தாழ்ந்து பாதம் போற்றுவோம்

———

[வாழ்விலும், கவிதையிலும் ஜெயமும், விடிவெள்ளியும் இரட்டையராய் வாழ்ந்தவர்கள். முதலிரண்டு அடிகளையும் 'ஜெயம்' தொடக்கிவைக்க 'விடிவெள்ளி' திருக் கடைக்காப்புச் செய்கிருர்.]

# குருசேறிய ஞானகுருவே !

பல்லவி

பவ ஆக்கினை போக அருளும் பாதங்களே
குருசேறிய ஞானகுரு எம்பராபரா

சரணங்கள்

1

ஒளியாய்த் திகழ்தூதர் பணியும் ஓதும்பரா
மறை கூறிய யேசுவெனும் எம்பராபரா --பவ

2

மருளாக்கிடு தீய உலகின் மாயங்களே
மிக மாறிடவே அருளும் எம்பராபரா —பவ

3

பலதாக்கிடு மான எமது பாவங்களே
பலியாகியே போகச் செய்யும் எம்பராபரா —பவ

# ஏசுபெருமானே

1

ஆதியினில் வார்த்தையென ஆகிவரும் அன்பே
ஆனமுறை தீர்க்கருரை ஆனபெரும் அன்பே
வேதமதில் ஆதியந்த மாயுறையும் அன்பே
மேசியாஎன் றடியார் வீழ்ந்து தொழும் அன்பே

2

மாதுமரி மாமகனாய் வந்தருளும் அன்பே
மாயபவ மோடலகை மாய்த்தபெரும் அன்பே
ஏதிலரைத் தேவசுதன் ஆக்கியஎன் அன்பே
இவ்வுலக மீட்பரெனும் ஏசு பெருமானே

3

மாபிணிகள் கூன்குருடு மாறவரும் அன்பே
மாண்டவரை மீட்டருளும் மாபெரிய அன்பே
தேவரசை யிவ்வுலகில் சேரவைக்கும் அன்பே
சேர்ஒலிவ மாவனத்தே சேர்ந்துருகும் அன்பே

4

காவுகுரு சேறியுயிர் ஈந்த பெரும் அன்பே
காலை யுயிரோ டெழுந்து காட்சிதரும் அன்பே
ஈவுதர வானுலகம் ஏறிய என் அன்பே
இவ்வுலக மீட்பரென்னும் ஏசு பெருமானே.

———

# வருவாய்! வரம் தருவாய்!

1

உயிர் தரும் திரித்துவ ஆவியினல்
துயர் பவ வினே கெடுமே விரைவாய்
புது மனந்தரும் புனிதா, வருவாய்,
புறவுரு வானவனே

2

நவகனி அருள்பவனே, ஒளியாய்ச்
சபைக் குயிர் தருபவனே. அன்பாய்
அகம் நிறைந்திட வரமே தருவாய்,
அழலுரு வானவனே.

3

நிருமல உருவினனே, கிறிஸ்து
பரமெழ வருபவனே, உளமே
அருள் நிரம்பிட தினமே அமர்வாய்
அருவுரு வானவனே.

4

சுகமனம் நிலைத்திட வாழ்வினிலே
தினம் ஜெயம் அடைந்திடவே உயிராய்
மனம் நிரம்பிட நிறைவாய் உறைவாய்,
மனு நரர்க் காறுதலே

# கடவுள் வாழ்த்து

''பரனே ! கருணை மழை பொழிவாய்''

1

அன்புக் கடலே அருள்முகிலே
அம்மை யப்ப ளுகிவரும்
இன்பப் பரனே இதயமதில்
இனிக்கும் தேனே ஒளிப்பிழம்பே
துன்பக் கடலுக் கொருபுணையே
துயரப் பனிக்குச் சூரியனே
நின்பொற் றுளெம் சிந்தையிலே
நிறுவிப் பணிய அருளுகவே.

2

சங்கத் தமிழும் தளராத
வீர மிரண்டும் தருநிலமாய்
எங்கும் புகழ அரசாண்ட
இனிய நல்லூர்ப் பழம்பதியில்
திங்கள் வதனச் சிறுவருளம்
தெருட்டி மலர்த்தும் வழிபயிற்றும்
எங்கள் கடமை யொளிகால
இறைவா கிருபைக் கண்பாராய்.

3

தண்மை யன்பு தயை பொறுமை
தாய்மை உணர்ச்சி அறிவமைவு
உண்மை யூக்கம் திறமைகளால்
உயரும் தூய ஆசிரிய
வண்மைப் பணியில் நாமோங்கி
வளரப் புவியின் வாழ்வினிலே
பண்பின் அறிவுக் கனிபழுக்கப்
பரனே கருணை மழைபொழிவாய்.

# கவியரங்கு

# தமிழ் மரபு

1

எங்கும் தமிழாய் இலக்கியமாய்ப் பன்னூறு
சங்கம் சபைகள் தழைத்துயர்ந்து—பொங்கிடினும்
மோதும் சமரின் முறிவு நெரிவுகளில்
காதும் கிழிகிறது காண்

2

கல்லுமுருகக் கதை கவிதை கட்டுரைகள்
வல்லதமிழ் தேனாய் வடிகிறதென்—றெல்லாரும்
சொல்லும் பொழுதே துயர்மரணப் போர்களினால்
பல்லும் உடைகிறது பார்.

3

நோவாகி நையுமெந்தன் உள்ளம் நுவலுகின்ற
பாவாரம் ஈதில் பலவழுக்கள்—மேவுதற்
கென்செயலாம் குற்றம் எதையும் அறிஞர்குழாம்
அன்பாய்ப் பொறுக்கும் அமைந்து.

4

ஞானநிலை பாரதிக்கு நல்குமரு ளம்பலத்து
மோனச் சுவாமிகளின் முன்னிலையில்—வானுயர்ந்து
பன்னு தமிழ்மரபு பாடப் பொருந்திநின்றேன்
மன்னிப்பீர் குற்றம் மறைத்து

1

கற்றவர்கள் தமதறிவால் கடினபதம் பிரித்துணர்ந்து
கலைபயில வருமிரும்புக் கடலைநூல்கள்
மற்றவர்கட் குதவாமல் மறைந்திருந்த காலத்தில்
மறுமலர்ச்சித் தமிழமுதக் கவிஞனாகிப்
பற்றலரும் பண்டிதரும் வியந்தடங்கத் தமிழிரும்பைப்
பதமாக்கி வளைத்தளித்த பாரதிப்பேர்
நற்றவனை நினைந்திடுவோம் ஞானமவற் களித்திருயாழ்ப்
பாண நகர் சாமிபுகழ் வழுத்தி நின்றே

2

உமிழ்நெருப்பின் அணுவெறியில் உலகமெலாம் அவலமுறும்
ஒருமொழியின் வெறியிலெம திலங்கைவாடும்
தமிழ்மரபின் வெறியொன்று அணுவெறிகள் மொழிவெறிகள்
தமைமிஞ்சித் தலைவிரித்து நெருப்பாய்நின்று
அமிழ்தனைய தமிழ்மொழிக்கும் தமிழுலகின் கலைஞருக்கும்
அவமான நிலையின்று தருதலாலே
தமிழ்மரபின் தகைமைகளும் அதன்நலனும் கெடுதிகளும்
சமர்நிலையும் கொடுமைகளும் சாற்றலுற்றேன்.

3

பத்திரிகை பொதுமேடை என்றகுரு சேத்திரத்தில்
பாண்டவரும் கௌரவரும் பலத்தபோரில்
கத்தியெனும் பேனாவால் கைகால்வாய்ப் படைகளினால்
கழுத்தறுத்தும் தமிழ்மரபு காக்கநிற்கும்
இத்தருணம் தமிழ்மரபை எதுவென்று விளக்கிடுதற்
கிசைந்துநின்ற என்துணிவை வியந்துவாழ்த்தி
வித்தகனென் றுரைப்பீரோ? விசர்க்கவிதை என்பீரோ?
வேண்டியவா றுரைத்திடுக நானென்செய்வேன்

4

சங்கநூற் பரப்புகளில் தமிழர்பழம் சரிதைகளில்
தமிழ்மரபின் விளக்கமெலாம் காண்பமேனும்
எங்குமொளி பரப்பிவரும் இனியதிருக் குறளமுதே
இதனைமலை மேல்விளக்காய் எடுத்துக்காட்டும்
இங்கதனை நினைப்பதுநம் இலக்கியப்போர்க் களத்திலெழும்
இரைச்சலுக்கும் சமர்நிலைக்கும் பொருத்தமாகும்
சிங்கமெனப் புலிகரடி அரவுநரி யெனச்சீறும்
திருப்பணிக்குச் சமர்ப்பணமாம் குறள்நூல் வாழ்க.

5

சான்றாண்மை பண்புடைமை குடிமையொடு பெருமை யென்று
தமிழ்மரபுக் கிலக்கணம்செய் குறள்நூலின்கண்
தோன்றுகின்ற நலங்களெல்லாம் மேடைகளில் விளக்கிப்
சொல்லுதற்கே பயன்படுத்திக் கருத்துமோதும் [பேசி
ஆன்றதமிழ்ப் பெரியோர்கள் தமிழ்மரபைக் காக்கஅதன்
ஆணிவேர் அறுக்கின்ற தொண்டுகாண்பீர்
சான்றிதற்குச் செய்திஇதழ்ச் சண்டைகளும் சச்சரவும்
தாமேநம் தமிழ்ப்பண்பு பறக்குதம்மா

6

காடுமலை கடல்வயலில் கைத்தொழிலில் உடல்நசிந்து
கருந்தழிந்து புவிவளத்தின் உயர்வுக்காக
மாடுமுதல் விலங்குகள்போல் மரணவழிச் செல்கின்ற
மனிதஉருப் பிராணிகளின் வாழ்வைப்பற்றிப்
பாடுகின்ற எழுதுகின்ற பண்புகளால் தமிழ்மரபு
பறிபோதல் சகியோமென் றெழுந்துநின்று
ஆடுகின்ற கூத்துகளும் அதற்கெதிர்க்கூத் தாடுதலும்
அவமானம் அழுகையொடு சிரிப்புமன்றே.

7

செய்ந்நன்றி கொன்றமகற் குய்வில்லை என்றகுறள்
தெரிந்துகொண்டு தமையுயர்த்தும் ஏணிதன்னை
நையஉதைத் துயருவது தமிழ்மரபோ ? அறிவில்வாழ்வில்
நம்மிற்கீழ் தாழ்ந்தவர்கள் உயர்தல்கண்டு
துய்யமன நிலைதிரிதல் தமிழ்மரபோ தோல்விகொளல்
துலையல்லார் கண்ணுமெனும் குறள்மறந்தே
பெயக்கண்டும் நஞ்சுண்டே யமைவரெனும் குறள்வழியைப்
பேணுமை தமிழ்மரபோ ? பெரியநாசம்,

8

செந்தமிழின் மரபுவழித் திருக்குறளின் வாழ்வினிலே
செல்பவர்கள் தமிழ்மரபுக் கமர் தொடுத்தால்
சிந்தனையும் கலையுணர்வும் இலக்கியமும் சேர்ந்துவாழ்வு
சிறந்துயரும் அப்போரில் அழகு சிந்தும்
சந்தை வெளி நின்று குரைத் தொன்றை யொன்று கடிப்பதற்கும்
தலையறிவின் மனிதர்பொரும் சண்டைகட்கும்
எந்த விதம் விகற்பமுண்டோ அது போல இலக்கியப்போர்
இனிமையுறப்பொருது தமிழ் வளர்த்தல் நன்றே

9

அணிஎதுகை மோனைகவிக் கமைதல் முறை எனினுமதற்
கடிதடியில் அழிதொழிலில் இறங்கல் நன்றோ ?
பிணிதவிர்ப்பேன் ஆருயிரைப் போக்கியபின் என்றொருவன்
பேசுதல் போல் இலக்கியப் போர் புரியலாமோ ?
துணிவு நன்று பொறுமையுடன் அதுகலந்தால் அம்மம்ம
துயர்நெருப்புக் கடிநிலையாம் இதை நினைந்து
பணிபுரிவோம் தமிழ்வளர்க்கத் தமிழ்மரபைக் கலைஞர்களைப்
பலிஎடுத்தல் கொடியபெரும் பாவம் பாவம்

## 10

மன்னிக்கும் சிலுவைமதம் பேணுதற்காய்ப் பகைவர்களை
மடக்கியடித் தருங்கொலைசெய் மேனாட்டார்போல்
அன்னைமொழி வளர்ப்பதற்கும் அடிபிடிபொய் செருக்கெரிச்
ஆபாசம் வசைதிட்டு வழியில் நிற்போர் [சல்
மன்னுமுயர் மரக்கிளையின் நுனியிருந்தே அடிதறிக்கும்
மதிவல்லோர் எனப்புகலல் பொருத்தமன்றோ ?
பன்னுதமிழ் மரபுவழி பண்புநிலை கைவிட்டுப்
பணிபுரிதல் பயங்கரமாய் முடியுமன்றோ ?

## 11

உயர்த்துதமிழ் இலக்கியத்தை உயிர்கொடுத்தும் வளர்ப்போமென்
றொருகாலில் நிற்பவர்கட் கிந்தநாளில்
வயிற்றெரிச்சல் தலைப்பாரம் கண்மறைதல் மதிமயக்கம்
வாயலட்டல் என்றபுதுக் கலைநோய்தோன்றி
பயித்தியமாய் முடிகிறது பரிதாபம் நோயகற்றப்
பலமருந்தும் பத்தியமும் கண்டாராய்ந்து
துயர்துடைக்கத் தமிழியக்க விழாச்சபைகள் அறிஞர்குழாம்
தொண்டு செய்க தமிழ்த்தெய்வம் கருணை செய்யும்

## 12

கம்பனிளங் கோகபிலன் ஔவைமுதல் புலவர்தரும்
கடுந்தமிழை வடித்தெடுத்துக் கனிவுமாக்கி
எம்போன்ற பாமரரும் இனிதுசுவைத் திடுமாறு
இலக்கியம்செய் தளித்தபா ரதியவற்றைத்
தம்புலமைத் திறம்தோன்றத் தளைசீர்யாப் பமைதியுடன்
தந்தனரென் பதனை இரு சுட்சியர்ரும்
நம்பிடுகில் சமர்குறையும் பழைமையிலே புதுமைவரும்
நலமுணர்க புதுச்சிருட்டி வளர்கநன்றே

## 13

வள்ளுவத்தை அகம்கலியைக் குறுந்தொகையை கற்ரு
  வடித்திடுக புதுக்கவிதை காதல் சிந்தும் [ராய்ந்து
தெள்ளுபுற நானூறு சேக்கிழார் கம்பனெனும்
  செந்தமிழிற் ருேய்ந்திடுக தெளிவுண்டாகும்
வெள்ளமென வருமுலகக் கதைகவிதை படிக்கின்றீர்
  விழைந்துபழந் தமிழ்கற்க முனிவதேனே ?
எள்ளலிலாப் பழந்தமிழர் வாழ்வுநிலை காதல்மறம்
  எத்தகைய தென உணர்தல் இன்பமன்ருே ?

## 14

தொல்லாரும் இலக்கியங்கள் கற்பதிஞல் புதுப்படைப்பில்
  சோதியுறும் தமிழறிவும் உயருமின்று
கல்லாதார் என்றுபிறர் கூறிவரும் அதை எதிர்க்கும்
  கடிபிடியும் கசப்புளமும் குறைந்து நாட்டில்
எல்லோரும் இலக்கியத்தை வளர்ப்பதிலே எனினுமொன்ருய்
  இணைந்திடுதல் மிக லகுவாம்இதனைச் செய்ய
வல்லோர்கள் முன்வருக வாய்ப்போரும் முடிவுபெறும்
  வளருமுயர் தமிழ்மரபும் வாழ்க! வாழ்க!!

# எது நாகரிகம் ?

### பாயிரம்

**1**

அன்பு வணக்கங்கள் அடியேன் கவிதைதனில்
வன்சொல் கொடுஞ்சொல் வருமெனினு முண்மையிலே
இன்ப நகைச்சுவைக்கென் றிக்கவிதை செய்ததன்றித்
துன்பக் கருத்தொன்றும் சொல்லவில்லை மன்னிப்பீர்

**2**

சாம்பார்த் தமிழ்வாழ்வு தாறுமா றுகிநறுந்
தீம்பாலில் நஞ்சு சிறிதுகலந் — தோம்புகின்ற
இன்றுதமிழ் நாகரிகம் ஏதென் றுரைக்கவந்து
நின்றேன் நடுங்குமெந்தன் நெஞ்சு

### எது நாகரிகம் ?

**3**

பாலாவி யாடை தரித்துடல் காட்டல் பருத்தவிழி
வேலால் எறிதல் வயிற்றி லொருசாண் வெளிவிடுதல்
நாலாறு பேரில் ஒருவர்செய் காதல் நடம்புரிதல்
மேலான நன்னக ரிகமென் றோதுமிம் மேதினியே.

**4**

'கிட்டிலர்' 'இஸ்டலின்' 'சேம்பலின்' மீசை கிளரவிட்டு
கட்டும் சிறுமணிக் கூடு முழங்கையி லேபொருத்தி
சட்டை புதுவித மாக அணிந்து தலைசுருட்டும்
பட்டிகள் நாகரி கத்தினைப் போற்றுமிப் பாருலகே

**5**

இந்த நிலையினில் என்னசொல் வேன்நாக ரிகமிது
விந்தை பலசெய்யும் வேடிக்கை மோசம் விளம்பிடிலோ
சிந்தை துயருறும் நிர்வாண ஊரினில் சேலையுடுத்
தந்தமில் பாடு படுபவன் போலென் அவலமதே

(வேறு)

**6**

மங்கையர் உயரம் பாய்தல் மடமச்சம் நாண கன்று
சிங்கமாய் நிமிர்ந்து சீறிச் செய்கையி லாண்க ளாகித்
தங்கையர் கல்வி வாழ்வு தலைதடு மாறும் போதில்
இங்குநின் றென்க ருத்தை எப்படித் துணிந்து சொல்வேன்.

**7**

தலைமயிர் இரவல் பல்லின் தன்மையு மதுவே நல்ல
கலைமொழி இரவல் வாழ்வின் கனவெலாம் இரவ லாகி
விலையுறு நாக ரிக விதமெலாம் இரவ லான
நிலையிலே என்ன செய்வேன் நின்றுநான் திகைக்கின் றேனே

**8**

மெய்யெலாம் தெரியு மாறு மேலுடை தரித்த லாலே
நெய்யிலே எறும்பு போல நிலைகுலைந் திளைஞர் கூடச்
செய்யுமிந் நாக ரிகம் சிறந்ததென் றுலகு மெச்சிப்
பொய்யிலே வாழும் போது புகலுவ தெதனை நானே.

**9**

சந்தியின் மதவு தோறும் தாமிருந் தொருவா லில்லா
மந்திக ளாகிச் செல்லும் மங்கையர் நடுங்க வாயின்
தந்தமெல் லாமி ழித்துத் தமிழ்ப்பண்பைக் கொல்லு கின்ற
மைந்தர்கள் வாழ்வே இன்று மனிதநா கரிக மென்பார்.

(வேறு)

**10**

பண்டு நாகர் இனத்திருந்து
பரவி வந்த தாதலினால்
கொண்ட நாக ரிகமெனக்
கூறும் அறிஞர் கருத்துமுண்டு
விண்ட நாகம் கக்குகின்ற
விஷமும் கொலையும் சினமுமிதில்
உண்டா தலினால் அக்கருத்தும்
உண்மை யாகப் பொருந்துமன்றே

## 11

நகரத் திருந்து வந்த திந்த
நாக ரிகம் என்றறிஞர்
பகர்வர் அதுவும் பொருந்திடுமே
பயமும் வெறியும் வெளிவேஷம்
மிகவும் நிரம்பிப் பொய்சூது
மிருக சுபாவம் மிஞ்சி நின்றே
அகமும் புறமும் வேருன
அவலம் பெருகும் நகரமதில்

## 12

இன்று நாக ரிகமிதில்
இந்தநகரத் தன்மையெலாம்
நின்று புரியும் கொடுமைகளை
நிதமும் கண்டோம் நாகரிகம்
என்ற சொல்லே இதயத்தில்
இடிபோல் விழுந்த தாதலினல்
நன்ருே அன்ருே இதுவென்று
நாடி யுணர்தல் நலமாகும்.

## 13

உடுக்கும் உடையில் வீடுணவில்
உயர்ந்த நிலையில் வாழ்ந்துலகில்
நடக்கும் நடையில் விஷம்கலந்த
நகைப்பில் நடிப்பில் வெறிமதுவைக்
கொடுக்கும் விருந்தின் உபசாரக்
கோலா கலத்தில் நாகரிகம்
அடக்க மென்ப தறிவீனம்
ஆகும் என்னும் தமிழ்மரபே

சன்மார்க்கசபை
ஆரம்பம். 1934
குன்றக்குடி
நெல்லிப்பழை

## 14

உடையைச் சுருக்கி உடல்தெரிய
உழன்றான் தசையை விழுங்கிவருங்
கொடிய குணமும் கொலைவெறியும்
கூடி வாழ்ந்த கற்காலக்
கடையர் போல நம்வாழ்வும்
கற்கா லத்திற் றிரும்புகின்ற
மடைமை கண்டோம் நாகரிக
மாண்பை யறிதல் மிகநன்றே.

(வெண்பா)

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவ"ரென் — றுரைத்தகுறள்
வாழ்க தமிழ்கண்ட நாகரிகம் மாநிலத்தில்
சூழ்கபல் லூழி தொடர்ந்து

## 15

பண்பொடு சால்பு மானம்
பழமைநற் குடிமை வாய்மை
நண்பொடு பெருமை யென்றே
நாயனார் குறளில் காட்டி
மண்ணுயர் நாக ரிகம்
மனதிலே உள்ள தன்றி
உண்ணுமூண் உடைவீ டாதி
ஒன்றிலு மில்லை என்றார்

## 16

பொருளதி காரம் தன்னில்
புதுமைகள் பொழிந்தா ரங்கே
அருளிய கண்ணோட் டம்மாம்
அதிகாரம் தன்னி லிந்தப்
பெரியதோர் நற்கருத்தைப்
'பெயக்கண்டும்' என்று சொன்ன
அருமைசேர் குறளில் தந்த
அழகெழில் வாழ்க! வாழ்க!

**17**

நாயனுர் குறளிற் சொன்ன
　　நாக ரிகத்தைக் கூறும்
தூயஅக் குறளே ஆய்வோம்
　　துயர்தரும் நஞ்சை வார்த்து
மாயமாய் நண்ப ரீந்தால்
　　மகிழ்வுட னருந்தி யுள்ளம்
நேயமாய் அமைக அஃதே
　　நிலைத்தநா கரிக மென்றுர்

**18**

மற்றவ னுள்ளம் நோக
　　மனத்திலும் நினையா தன்போ
டுற்றிடு துன்ப மெல்லாம்
　　உறுத்தினும் நன்மை செய்த
கொற்றவன் யேசு மாண்ட
　　குருசுபோல் அமைந்து நிற்றல்
கற்றவர் போற்று நாக
　　ரிகமென் றதுமுப் பாலே

**19**

உண்மைநன் ஞக ரிகம்
　　உள்ளத்தின் பண்பே வாழ்வின்
வண்மையின் அன்பே சேர்ந்து
　　வாழ்தலே யன்றி யிந்த
மண்ணினில் வெளிவே ஷத்தின்
　　மதிநா கரிக மென்ற
கண்ணிலான் அழகின் காட்சி
　　காண்பது போலு மன்றே

## 20

பல்லிசை பரப்பும் எங்கள்
பைந்தமிழ்க் குறளென் றேநாம்
சொல்லியே தொழுவோம் அஃதில்
சொற்பொழி வாற்றி நிற்போம்
நல்லவள் ளுவத்திற் கண்ட
நாகரி கத்தைச் சொன்னால்
மெள்ளவே அதனை நீக்கி
வேறுரை பேசி நிற்போம்

## 21

வள்ளுவ நாக ரிகம்
வாலிபர் தலைமேற் கொண்டு
தள்ளிடா வாழ்வு முற்றும்
தமிழ்வாழ்வா யமைக்கா விட்டால்
மெள்ளவே கற்கா லத்தில்
மீண்டும்நாம் சேர்வோம் தீமை
வெள்ளமாய்ப் பாயும் மூழ்கி
வெந்தமிழ்ந் தொழிவோம் திண்ணம்

## 22

அந்நிய நாக ரிகம்
அதன்நிலை ஆய்ந்தி டாது
மன்னிய தமிழ்ப்பண் போடு
மயங்கிடக் கலந்து சாம்பார்
என்னுமோர் கலப்பு வாழ்வில்
இனிமைகண் டருந்தி மாயும்
இன்னிலை ஒழிய வேண்டும்
எனமுர சறைவோம் வாரீர் !

# கணேசாஞ்சலி

ஆன்றோர் சபையீர்! அடியேன் வணக்கங்கள்
சான்றோர் முனிவர் தமிழ்க்கடலின் பாவரங்கில்
தோன்றினேன் பாட்டால் துதிக்க அவர்புகழை
வான்றோய் இரவிமுனர் வந்தவிடி வெள்ளியைப்போல்

வண்டமிழின் பண்டிதனார் வாஞ நடராசர்
கண்டு தமிழ்க்கவிதை கட்டாயம் செய்கவென்றார்
தண்டனைபோல் ஏங்கிச் சமைத்துவந்தேன் ஆனாலும்
பண்டைத் தமிழமைதி பாட்டிலில்லை ஒப்புகின்றேன்

முப்பத் திரண்டாண்டின் முன்பலநாள் தெல்லிநகர்
ஒப்பும் புகையிரதம் விட்டிறங்கி ஊர்ந்துசெல்லும்
அப்போது நாம்சிறுவர் அவர்முன் மறித்தோடித்
தப்பாகக் கேள்வி தமிழ்த்தொடரில் கேட்டுநிற்போம்

மூக்குப் பொடியுறுஞ்சி முகமலர்ந்து புன்சிரிப்பில்
தாக்கும் சினமின்றி அன்பராய்த் தமிழ்விளக்கும்
வாக்கும் எமையும் மதித்ததமிழ்ப் பண்புவிழி
நோக்கும் அவர்நடையும் நெஞ்சினிலே இன்றுமுண்டு

ஐயர் உருவம் அகந்தனிலே நின்றினிக்கும்
துய்யநிலை தூண்டுதலால் சொல்லுதமிழ்ப் பாடலின்று
செய்யத் துணிவுகொண்டேன் செந்தமிழில் வல்லார்கள்
வெய்ய பிழைபொறுக்க வேண்டி நின்று பாடுகின்றேன்.

பண்டைப் புலவர் பரம்பரையில் வந்து தமிழ்த்
தொண்டே தமதுயிராய்த் தோன்றியவர் – கண்டவர்க்குத்
தெய்வ மனையார் சிவநெறியில் நின்றகணே
சையனார் வாழ்வார் அமைந்து

சுன்னைக் குமார சுவாமிக் கடல்முகந்தே
மன்னும் தமிழ்மா மழைபொழிந்து - பன்னூறு
பாவலராம் பச்சைப் பயிர்வளர்த்த பைந்தமிழின்
காவலனார் வாழ்வார் கனிந்து

தன்னேரில் லாததமிழ்ச் சான்றோன் கடலனைய
பொன்னம் பலனார் பொருப்பினின்று - துன்னியெழுந்
துய்யும் தமிழமுதை ஊட்டிவரும் பேராறு
ஐயர்புகழ் வாழ்வார் அமைந்து

பல்காப் பியங்கள் படிந்தெழுந்த கார்மேகம்
தொல்காப் பியத்தே சொரிந்தது நல் - ஒல்காப்
பெருந்தமிழில் என்றுமருட் பேரின்பம் கண்ட
அரும்புலவர் வாழ்வார் அமைந்து

நற்றமிழுக் குய்வுதந்த நாவலனார் கால்வழியில்
உற்றார் தமிழமுதம் உள்ளத்தின் — பற்றாகிச்
செந்தமிழில் தெய்வத் திருநெறியைக் கண்டுயர்ந்த
அந்தணனார் வாழ்வார் அமைந்து

1

தருக்கவுரைச் சண்முகனார் தமிழ்த்தாதை
சாமிநா தையர்போற்ற
அருக்கனெனத் தமிழ்ஒளியைப் பரப்பிநின்ற
அறிவுமலை யெனநின்றாலும்
வருத்தலையின் மருதடிசேர் வாரணத்தின்
திருவடியில் அடங்கிவாழ்ந்து
கருத்தமைதி சாந்திநிலை கண்டகணே
சையர்புகழ் கழறற்பாற்றே

2

செந்தமிழின் புலமையுறு கதிர்காமர்
செப்பனிட்டுப் பசளேசேர்க்க
அந்தமிலாத் தமிழ்க்கடல்பொன் னம்பலனர்
நீர்சொரியச் சுன்னேமேவும்
சந்தமுயர் பாவல்லோன் தமிழ்ப்புலவர்
வளர்த்துவிடத் தழைத்துயர்ந்து
சிந்தனேயில் வளர்ந்துதமிழ் நிழலளிக்கும்
கற்பகத்தை நினேந்து வாழ்வோம்.

3

கொடைவள்ளல் பொன்னேய கோமகனின்
தமிழ்ப்பணியில் இணேந்துநின்று
கடினஉரை தருகடல்தொல் காப்பியத்தின்.
விளக்கவுரை யளித்துநாட்டின்
மடமகற்றும் குறுமுனியாய் வந்துபல
மாணவரை யீன்றவர்க்கு
நடைபயிற்றும் தாயாகித் தமிழமுதம்
ஊட்டிநின்ற நல்லோன் வாழ்க.

4

நல்லூரின் மெய்ப்புலவன் அரசகேச
சரிசெய்த இரகுவம்சம்
எல்லார்க்கும் விளங்காத இரும்பனேய
இலக்கியமாய் விளங்கிநிற்கப்
பல்லுடைக்கும் கடினபதம் பதம்செய்தே
உரைதந்து படிக்கவைத்த
வல்லோனேச் செந்தண்மை பூண்டொழுகும்
அந்தணனே வழுத்தி நிற்பாம்

5

பேரறிஞர் ஆனாலும் பிள்ளைமதிச்
சிறுவர்களும் கேட்பதற்கும்
சீராக விடையருளும் செம்மனத்துத்
தாழ்மைநிலை செப்பற்பாற்றே
ஆரமுதத் தமிழ்க்கடலின் கரைகண்டு
நாவலனார் வழியைக்காத்து
ஆரியமும் செந்தமிழும் இருகண்ணாய்
அமைந்ததமிழ்க் கொண்டல்வாழ்க.

6

பொன்னினொடு நிலபுலமும் புகழ்வரவும்
தமிழறிவும் மருதநிழல்
புன்னைநகர் இறையடிக்கே சமர்ப்பணமாய்
படைத்தமைந்த புதுமைஞானி
அன்னைதந்தை மனைவிமகள் அருஞ்சுற்றம்
அனைத்துமந்தப் பெருமானுக்கி
மன்னியசெந் தமிழ்ப்புலமை வாழ்வெதுவென்
றுணர்த்திநின்ற மதிவல்லோனே.

7

கற்றபெரும் கலைகல்வி சிறுவர் செயும்
மணற்சோறும் கடவுள்பாதம்
பற்றுதலே பேரறிவென் றெஞ்ஞான்றும்
பகர்ந்துபர ஞானயோகம்
முற்றியநல் முனிவரனாய் அகத்திலெழும்
ஞானஒளி முகத்திற்காட்டும்
நற்றவனும் தமிழ்ப்பற்றைத் தெய்வீகப்
பற்றாக்கும் நலமேவாழ்க

8

பத்திரிகை புதிதாக முளைத்தெழுங்கால்
    ஆசியுரை பகர்ந்தும்நாட்டில்
புத்துணர்வும் புதுக்கருத்தும் தோன்றிடுதல்
    கண்டவற்றைப் போற்றிநின்றும்
வித்தகத்தின் சிகரமென விளங்கிடினும்
    சிறியோரை வியந்தும்வாழ்ந்த
உத்தமரைப் புதுமைகளில் உயர்ந்தனகண்
    டுவப்பவரை உளத்தில் வைப்பாம்

9

காலத்தின் விரைவோட்டம் கண்டுமனம்
    கலவாமல் அதனேடொன்றும்
சீலத்தால் புதுமைதரும் அறிஞருக்கும்
    பழந்தமிழின் புலவோருக்கும்
பாலத்தின் நிலையாகிப் புதுமையிலே
    பழைமைகண்டு வியக்கும்பண்பால்
ஞாலத்தில் உயர்ந்தவரை நல்லவரை
    நாமின்று வழுத்தல் நன்றே

10

நஞ்செரிச்சல் தீயாகி உளமெரிந்து
    நம்மிலிவன் மேலாய்வந்து
விஞ்சுவதோ ? என்றுதமிழ் வளர்ப்போரை
    விழுத்தியழித் திடும்நாமின்று
வஞ்சனையும் தலைச்செருக்கும் வாய்ப்பறையும்
    படபடப்பு மானதீமை
கொஞ்சமுமே யில்லாத குணக்குன்றை
    மனத்தமைப்போம் தூய்மையாவோம்

# வாழ்த்து

# நத்தார்த் திருநாள்

சத்தியமே தெய்வம் தரணிக் கொளிநானென்
றித்தரையில் வந்துசொன்ன யேசுபிரான்—உத்தமர்க்குச்
சுத்தநிலை ஈயவென்று தூயசிசு வானதினம்
நத்தார்த் திருநாள் நலம்.

அன்பே உடலாய் அறமுயிராய் வந்துலகின்
துன்பம் துடைக்குமுயர் தூயவஞர்—மன்னுருவின்
பாலகனுய் வந்தனரிப் பாருலகில் என்பதுவே
ஞாலமெலாம் போற்றுதிரு நாள்.

இன்ஞ செய்தார்க்கும் இனியவே செய்கவெனச்
சொன்ன துடன்குருசிற் சோரிசிந்தி—ஒன்னலரை
மன்னித் தருள்பெருக்கும் மாதவனைக் காண்பீரால்
கன்னிமரி கையிற் கனிந்து.

# நலம் தருக !

அன்னை துச்சா தனனாலே
அல்லற் படுத லாற்றாது
மன்னும் அவளின் மக்களெலாம்
மறுகிற் கிடந்தே மனம்மறுக
கண்ணீர் மரணம் கடுந்துயரம்
கவலை இவைகள் கொண்டுவரும்
நண்ணும் கொடிய புத்தாண்டே !
நன்மை செய்தே நலம்தருக.

மதுரத் தமிழர் கிழக்குவட
மாகா ணத்தில் தவமிருந்தும்
உதிரம் வெயர்வை கலந்துதுயர்
உழந்து வாடி உயிர்சோர்ந்தும்
அதிரும் அறப்போர் புரிந்தெங்கள்
அமுதத் தமிழைக் காக்கின்றார்
புதிராம் நிலையில் வருகின்ற
புத்தாண் டே! நீ நலந்தருக.

# பொங்கல்

வெண்பா

செந்தமி ழன்னை சிரம்குனிந்து சிந்தையெலாம்
வெந்துருக, வெள்ளம் கொடுமைசெய – வந்ததிருப்
பொங்கற் பெருநாள் பொலிக வளம்பெருகி
மங்கலமாய் இன்பம் மலிந்து.

அன்பும் அறனும் அருளும் பெருகிநனி
பொன்பெருகிப் புத்தாண்டு பொங்குகவே – இன்பமெலாம்
அன்பு நிறைகவென ஆசி தருகிறுன்
தொண்டன் இறையைத் தொழுது.

# வலிமேற்கின் கலைமலர் வாழ்த்து

### வெண்பா

**1**

வலிமேற் கெழுந்து வருசெந் தமிழின்
கலைமலர்க் கென்ஞசி கனிந்தேன் — நலமுறவே
வந்துதமிழ்த் தேனுகரும் வண்டுகளுக் கிம்மலரைத்
தந்தேன் பருகத் தமிழ்

**2**

### அறுசீராசிரிய விருத்தம்

விதமுறு கலைகள் செல்வ
விந்தைகள் விஞ்ஞா னத்தின்
புதுமைகள் மாட கூடம்
பொலிந்திடு நகர்கள் நாட்டில்
இதமுற வேண்டுமாகில்
இதனுயிர் நாடி யான
முதுகெலும் பேகி ராமம்
என்றுரை மொழிந்தார் காந்தி.

**3**

தள்ளரும் காந்தி போற்றும்
தக்கதோர் கிராம வாழ்க்கை
எள்ளுத லின்றிச் செம்மை
இலங்கிடத் தூய தொண்டு
கொள்ளுநற் சங்கம் செய்தே
குலவிய பணிக ளாற்றும்
வள்ளல்கள் நிறைந்த நாடு
வலிகாமம் மேற்கென் பாரே.

4

முத்தமிழ்க் கலைகள் வாழ்க்கை
முதலெனும் உழவு நாட்டின்
கைத்தொழிற் பொருள்கள் காட்டும்
காட்சிகள் உடைய தான
உத்தம விழாவெ டுத்தே
உலகெலாம் புகழ்ப ரப்பும்
வித்தகர் வாழ்க அன்னார்
வியன்பணி வாழ்க மாதோ.

5

கருத்தெழு வல்லான் செல்வ
ரத்தினம் முதலி யாரும்
உருத்திரா கபிரி யேலென்
றுரைத்திடு தொண்டர் கூடி
விருத்திசேர் கிராம சேவை
வியனுறச் செய்து நாட்டைத்
திருத்திய பணியி லீன்ற
செந்தமிழ் மலரே! வாழ்க.

6

நாலுபத் தாய சங்கம்
நலம்புரி கிராம சேவை
சாலுமிச் சபைகள் கூடிச்
சமாசமாய் அமைந்து தந்த
வாலிய தமிழில் செந்தேன்
வளர்க்குமோர் மலரே! வாழ்க.
மாலிருள் நீக்கும் தண்ணென்
மதியெனச் சிறந்து வாழ்க!



மணிவாசக நூல் நிலையம் ★ ராம் ...
ஆரம்பமா 1934
... சிதம்பரம்

**7**

அன்புபண் பமைதி செம்மை
    அருள் நிறை வருமு யற்சி
என்னுமிச் சுகுண மெல்லாம்
    இயைந்திடு கிராம வாழ்வில்
மன்னிய மலரே! தூய
    மணமொடு விரிந்து கன்னற்
பொன்மல ராகி நின்று
    பொலிந்துநீ வாழ்க! வாழ்க!

---

# கதிரொளி வாழ்க !

நேரிசை வெண்பா

1

கீழ்த்திசையில் தோன்றிக் கிளரும் கதிரொளியே !
ஆழ்த்தும் அறிவொளிதந் தங்குல்ல — வாழ்த்துகிறோம்
மல்லார் வளம்நிறைந்த மட்டுநகர் வித்தகனே !
பல்லாண்டு வாழ்க படர்ந்து.

2

நீர்மகளிர் பாடுகின்ற நீர்வாவி சூழ்ந்திடவும்
பார்புகழப் பாலொடுதேன் பாய்ந்திடவும் — கூர்மதியும்
செந்தமிழும் அன்புளமும் சேருகின்ற மட்டுநகர்
வந்ததினல் வாழ்வாய் வளர்ந்து

3

மட்டுநகர் ஈன்ற மகான் விபுலா னந்தரடி
தொட்டுத் தவழ்ந்து துரிதமுடன் — எட்டிநடந்
தன்பு மழலை அறிவுரைகள் தந்திடுவாய்
இன்பக் கதிரொளி நீ ஈங்கு

4

அருமைக் கணேசருனக் கன்புப்பால் ஊட்டத்
தருமர் மடியில் தவழ்ந்து — உரிமைச்
சமூக, நிலைய மெலாம் தானடந்து துள்ளி
அமைகநீ திங்கடொறும் ஆங்கு

5

விண்ணின் கருணை விளங்குகவென் றேஆசி
அண்ணன் சமூகத்தொண் டன்தரநீ — நண்ணி
வளர்ந்து நமக்கும் வழிகாட்டி வாழ்க !
குழந்தைக் கதிரொளியே கூர்ந்து.

# வித்தக விவேகி வாழ்க !

### நேரிசை வெண்பா

1

எண்ணு மெழுத்து மிருகண்ணென வமைந்தோன்
விண்ணோ னடிகள் விழைந்திடுவோன்—பண்புருவோன்
ஆசீர்வாதப் புகழோன் ஆக்கும் விவேகி! நீ
தேசத் தொளியானுய் சேர்ந்து.

2

செந்தமிழில் தேன்பாலும் தெள்ளமுதும் சேர்த்தமைத்துச்
சிந்தனைக்கு நல்விருந்து செய்திடவே—வந்தனையால்
வல்லோன் அருளாளன் வண்கருணை தந்திடநீ
பல்லாண்டு வாழ்க படர்ந்து.

3

பன்னூ றிதழ்கள் பரந்தாலும் பேனுவின்
மன்னவர்க்குப் பொன்வழங்கும் மாண்புடைய—நின்னிதயம்
கண்டு மகிழ்ந்தோங் கலைத்தொண்டு செய்துபுகழ்
மண்டி வளர்க மலர்ந்து.

4

நாட்டில் விவேக நலம்வளர்த்து நல்லதமிழ்ப்
பாட்டில் உரையில் பண்புவளர்த்—தேட்டிலுயர்
புத்தொளியாய் இன்பப் புதுமைபல காட்டிடுக
வித்தகனே ! எங்கும் விரிந்து.

# பெரியார்

# கொல்லாமை காத்த கோமான்

உத்தமக் கருணைகாட்ட உலகினி லுதித்தவள்ளல்
சத்தியம் அகிம்சைஞானம் தழைத்திட வந்தசெம்மல்
வித்தகப் பிக்குமாரை விளங்கிடத் தந்தஅண்ணல்
புத்தனென் றுலகமேத்தும் புனிதமா தேவன் வாழ்க!

நாசமாய் உயிர்கள்வாட நடுங்குறு முளத்தால் அன்று
மாசறுவேள்வி ஆடும் மரித்திடா ததனைக்காத்தாய்
தீசனின்மூலம் புத்த திருநெறி இலங்கை நாட்டில்
வீசிநல் லறம்முளைத்து விளைந்திட விதைத்தாய் வாழ்க!

தந்தையின் அரசைநீக்கித் தருவனம் சென்று"தூய
சிந்தையில் அரசியலைச் சிறிதும்மும் மனத்துக் கொள்ளேல்
மைந்தரே!" என்றுபிக்கு மார்களுக் குண்மைதந்த
சுந்தர! அன்புசேவை தூய்மையின் உருவே வாழ்க!

---

# அடிமை இருள்களைந்த அண்ணல்

உள்ளமும் உடலம் போல
உயரிய தோற்றம் பெற்ருய்
அள்ளிருட் கண்டம் தந்த
அடிமைகள் கண்ணீர் மாற்றும்
வள்ளலே! சுதந்தி ரத்தின்
வடிவமே! மனித அன்பின்
வெள்ளமே! உள்ளூர் யுத்த
வெம்பகை ஒழித்து யர்ந்தாய்!

தச்சனின் மகனுய் வந்து
தண்ணணி உருவாய் நின்ருய்!
இச்சகம் மறவா துன்னே
இறைவனின் சிந்தை பெற்ருய்
அச்சமும் பொய்யு மில்லா
அரசியல் ஒன்று செய்தாய்
அச்சயன் பெரியோன் லிங்கன்
அமெரிக்க தவமே! வாழ்க!

---

ஆற்றினில் படகு தள்ளி
அஞ்சல்கள் கொடுத்து ழைத்தும்
சாற்றிய வணிகம் செய்தும்
சட்டநூ லறிஞ ஞகிப்
போற்றிட உயர்ந்து தேசப்
பொதுநலத் தலைவ ஞனுய்!
சேற்றினில் வளர்ந்த செந்தா
மரையெனத் திகழ நின்ருய்!

விலையிலாச் சுதந்தி ரத்தை
விளைத்திட்ட புகழோய்! நின்னைக்
கொலைசெய்தான் கொடியன் ஆனல்
கோயிலிற் றெய்வ மானுய்
சிலுவையும் நஞ்சும் குண்டும்
செம்மனத் தோர்கள் பெற்ற
நிலையிலே நீயும் பெற்ருய்
நீடூழி வாழு கின்ருய்!

# அமரகவி பாரதிநீ வாழி

''யாமறிந்த மொழிகளிலே'' என்றெடுத்துத்
தமிழையுல குச்சி வைத்தாய்
பாமரரும் தமிழ்க்கடலைத் துணிந்துதொடப்
பாட்டுடனே வசனம் செய்தாய்
காமரசக் கருத்துக்களைக் கடவுளருள்
கலந்திடவே அமைத்துத் தந்தாய்
நாமவனல் காற்றமுது நறுங்கனிதேன்
கலந்துதமிழ்க் கவி பொழிந்தாய்.

2

தெள்ளமுதக் கவிநெருப்பில் தேன்துளிகள்
சிந்திடவோர் புதுமை செய்தாய்
வெள்ளையரை எதிர்த்தகடும் வேகத்தால்
வெறுமைபசி வறுமை யுற்றாய்
கள்ளமறு சிதம்பரனார் திலகமுனி
காந்திமகான் புகழை நாட்டின்
துள்ளிவரும் துடிதுடித்த பாடல்களால்
துலக்கிவைத்த பாரதிநீ வாழிவாழி!

3

அஞ்சாத பேராண்மை அன்னைமொழி
தாய்நாட்டில் அகலா நேசம்
மஞ்சாரும் குழல்மடவார் சமத்வநிலை
மறைவேத தத்து வங்கள்
துஞ்சாத தெய்வபக்தி தூயமனம்
தருமசிந்தை துகளை நீக்கும்
எஞ்சாத வீரமுது கெலும்பமைந்த
அமரகவி என்றும் வாழி!

# யோகாஞ்சலி

பாகம் கொடுத்த பரனர் பதம்பணியும்
யோகர் மலையின் ஒளிப்பிழம்பு — சாகவில்லை
எங்கும் பரம்பும் இனியதனை உன்னவுன்ன
எங்கள் மகிழ்ச்சி எழும்.

காலம் கடந்த கருணைமுகில் யோகமுனி
மேலவனின் பாதமலர் மேவிடினும் — ஞாலமிதில்
வாழும் இதையறிந்தோர் வையகத்தில் தெய்வநிலை
நாளும் பெறுவர் நயந்து

அன்பும் அருளும் அகம்நின் றிருவிழியில்
இன்பப் பெருவெள்ள மாய்ப்பெருகி – துன்பதுயர்
போக்கும் திருவுருவம் பொன்றவில்லை நின்றினிமேல்
காக்குமெம துள்ளம் கரந்து

நற்சிந் தனைஒளியால் நானிலத்தை யேபுரந்த
கற்பகத்தை உள்ளக் கனியமுதை –– அற்புதமாய்
வாழ்ந்த குளிர்நிழலை வானகத்துப் பேரொளியைத்
தாழ்ந்து பணிவோம் தலை

நாமம் சுரந்துநின்ற ஞானத் திருவுருவைக்
காமம் சினம்மயக்கம் கட்டறுக்கும் ––தேமதுரத்
தெய்வ முனிவர் திருவடிகள் சிந்தைசெய்தே
உய்வோம் உலகில் உயர்ந்து

வெண்டா மரைமலரில் வீற்றிருக்கும் நாமகள் போல்
விண்ட வதனம் விளங்குவது — கண்டுருகி
நாளும் தொழநின்ற நல்லுருவம் எம்முளத்தில்
வாழுமினி வாளொளியாய் வந்து

ஒன்பதுபத் தாண்டுகளாய் உள்ளத் தொளிக்கதிரால்
மன்பதைகள் ஈடேற மாநிலத்தின் — துன்பதுயர்
போக அருள்பொழிந்த புண்ணியத்தை வாழ்த்துவதே
யோகாஞ் சலியென் றுரை.

---

# சமூகம்

# இங்கிலிசுத் தமிழர்

செந்தமிழைச் சிங்களவர்
சிதைத்தழிக்கப் பார்த்திடுதல் தீராப்பாவம்
நந்தமிழர் வீரமென்ன
நலமென்ன பண்பென்ன என்றுசுத்தி
தந்தைதமர் தடுத்தாலும்
தாய்த்தமிழ்க்காய் உயிர்விடுவோம் தரணி
சிந்தையினில் ஒருபொருளே [மீதெஞ்
அதுதமிழே அமிழ்தமதை மறவோம்என்பீர்.

அன்னைமொழிக் காவிதர
அவசரமாய் எழும்வீரச் சிங்கக்கூட்டம்
பன்னரிய நண்பர்குழு
பயில்கழகம் நிருவாகக் கூட்டமென்ற
இந்நிலைகள் எங்கெங்கும்
இங்கிலிசே பேசிமகிழ்ந் தெழுதிப்பின்னும்
அன்னைமொழி அமுதமொழி
அதைக்காப்போம் உயிர்விடுவோம் என்று
நிற்பீர்

எங்கள்தமிழ் மொழிபேச
இனியதன்று வளர்த்திடவே ஏற்றதாகும்
எங்குமிதெம் மனநிலையாம்
பிறநாட்டின் இங்கிலிசை விட்டுத்தள்ளிச்
சிங்களமே படித்தெமது
சிக்கலெலாம் நீக்கிடலா மென்றுகூறும்
சங்கிலிக்கோர் ஏற்றவிடை
கூறிடுவீர் இங்கிலிசுத் தமிழ்வல்லோரே

---

# கற்கால வாழ்வு

சந்திரனைச் சூரியனைச் சாற்றுகிர கங்களையும்
விந்தையுறு விஞ்ஞானத் தாலே இயற்றுகிறீர்
மந்திக் குரங்கின் வழிவந்த மானிடர்காள் !
சிந்தை திருந்தச் சிறிதுபணி செய்யீரோ ?

பாயும் முயலிருக்கும் பழையமதி நாணிடவோர்
நாயும் படுத்திருக்கும் நல்லமதி வானில்வரத்
தேயமெல்லாம் அற்புதமாய்ச் செப்புகிறீர் அந்தோநீர்
நாயும் சிரிக்க நடக்கும் நிலைகாணீர்

வீரச் செயல்புரிந்து விண்ணுலகங் கண்டுவந்தீர்
பாரைத் திருத்தும் படிஏதும் செய்திடிலோ
சீராய விஞ்ஞானம் சிறப்பாம் இருமையிலும்
பேரான வாழ்வு பெறுவீர் பெரியீரே

வலவன்ஏ வாதஒரு வானூர்தி செய்தீரே
உலகில் மனுக்குலத்தோர் உள்ளம் சிதைந்தழிந்து
கலகம் விளைத்தந்தக் கற்கால வாழ்வு செயும்
நிலைபரத்தைக் கண்டுகண்ணின் நீர்வடிக்க மாட்டீரோ ?

---

# கடமையும் உரிமையும்

1

அன்பு சிந்தும் அருள்முகத் தாமரை
என்கும் துய்ய இளஞ்சிறு பாலருக்
கின்ப மாகலை ஈயும் பணியுங்கள்
துன்பம் நீக்கும் துயர்நிலை மாய்க்குமே

2

தெய்வம் செய்த சிருட்டிகள் பாலர்கள்
உய்யவாழ உழைத்திடச் செல்லும் நீர்
பொய்மை யின்றியிப் புண்ணியம் செய்திடில்
வையும் என்றும் வழங்கும் துதிகளே

3

மேவு காகிதம் மேசை கதிரையின்
ஆவி யற்ற அலுவ லகமன்று
சீவ னுள்ள சிறுவரைக் கற்பிக்கும்
கோவில் என்பது கொள்ளுக நாளுமே

4

இருமை நல்கிடும் உம்மை இறைவராய்ப்
பெருமை யாய்ப்புவி பேசுதலா லுங்கள்
கருமம் ஆய கடமையை விட்டகன்
றுரிமை கேட்ப துயர்குண மன்றரோ

---

# எது வாழ்வு ?

உள்ளத்தில் நஞ்சும் உதட்டில் இனிப்புமுள்ள
கள்ளமே வாழ்வின் கசப்பு.

பிறர்வாழத் தான்சாகும் பேர்வாழ்வே வாழ்வின்
நிறைவாகும் பாரில் நிலைத்து.

உண்மையில்லா வாழ்வுமுறை ஊமைதரும் பாட்டிசையும்
கண்ணிழந்த பெண்ணழகும் காண்.

தெய்வநெஞ் சில்லாத் திருப்பணிகள் கேடாகும்
நையுமது பாருக்கு நஞ்சு.

தெய்வம் இலையென்னும் தீயோர்க்கும் அத்தெய்வம்
உய்யவழி செய்தலைநீ உன்னு.

———

# திருக்குறளறப்போர்

துன்பம் சகித்துத் துயர்மறந்து போராடும்
அன்புத் தமிழர்க் கறம்வெல்லும்—என்பதுமெய்
''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்''

அன்னை மொழிகாக்கும் அன்புநெறி கண்டரசு
மன்னும் மனம்மாறி மாண்புறுக !—உன்னுகவே
''வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்'

குண்டாந் தடிதுவக்கின் கூர்முனைக்கும் அன்புமுகம்
கொண்ட புதுமைத்தமிழ்க் கொள்கையென்று
—கண்டோமே
''இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு''

நீயரசே ! நின்று நிலைக்கில் அமுதனைய
தாயை இழந்த தமிழருக்குப் -- போயருள்செய் !
''அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை''

———

# அமைச்சியல்

1

மந்திரியும் மந்திரியும் மார்புதட்டி மோதுதலே
விந்தை யமைச்சின் விதம்.

2

சிந்திக்கா தெல்லாம் திருவாய் மலர்தலே
மந்திரிகட் குற்ற மரபு

3

கன்னை பிரிதல் கரடிவிடல் கைநீட்டல்
உன்னும் அமைச்சர்க் குயர்வு.

4

போத்தல் பணமூட்டை பொய்புழுகு சேர்ந்தகொடும்
வார்த்தை அமைச்சின வளம்.

5

இன்ருென்று கூறி இதைமறுநா ளேமறுத்தல்
என்றும் அமைச்சர்க் கியல்பு.

6

உல்லாச மாக உலக வலம்செய்தல்
நல்லமைச்சர்க் குற்ற நெறி.

7

தங்களினம் வாழ்ந்து தழைக்கப் பிறஇனத்தை
மங்கச் செயலமைச்சின் மாண்பு.

8

அறிவுறுதி நேர்மைபுகழ் அற்ருலும் ஆரும்
உறுமமைச்சர் ஆதல் உயர்

9

நல்லது போக்கி நடுநிலைமை நீக்குதலில்
வல்லது நல்ல அமைச்சு.

10

கொள்கைகளை நாட்டக் கொடுமை புரிந்தேனும்
உள்ளம் நிறைவமைச்சுக் குண்டு.

———

# சிந்தை அசைத்த சேதி

[இறைவனையும், மனித உயிர்களையும் பாடிப்பாடியே பரவசமடைந்த கவிஞர், இயற்கையின் எழிலையும் பாடத் தவறினாரல்லர். இயற்கையிலே தோய்ந்த கவிஇதயம் இங்குப் பேசத்தொடங்கி அந்தோ! இடையிலே நின்று விட்டதே!]

**1**

அந்திவான் காலைக் கடலின் அழகுபொழி
விந்தைஎழில் கோயில் விழா எனப்பன் னூறெனது
சிந்தை அசைத்தபல சேதியுண்டு பட்சிவிலங்
கந்தமிலா தென்றும் அழகு பொழிந்ததுண்டு

**2**

முல்லை கயல்பவளம் முத்து குவளைவள்ளை
வில்லுவேல் சேர்ந்து விளங்கும் கமலமொன்றும்
இல்லா இடையும் இருமலையும் வார்குழலும்
அல்லற் படுத்தி அழகு பொழிந்ததுண்டு.

**3**

இத்தனைபன் னூறழகென் இதயம் அசைத்தாலும்
சுத்த நினைவில் சுடர்தெறிக்கும் நல்லுணர்வில்
சித்தம் கவர்ந்தமைந்த செம்மைஎழில் நாலைந்து
நித்தம் மறவாதென் நினைவிற் கமழ்வனவே

**4**

சேற்றெருமைக் கன்றுகளில் செம்மறியின் குட்டிகளில்
போற்றி மகிழுமொரு புத்தழகு தோன்றுதல்போல்
நாற்றம் தரும்சிப்பி நல்லமுத்துக் காணுதல்போல்
ஏற்றமிலாக் கீழ்நிலையில் எழில்சிலகண் டேனுரைப்பேன்

**5**

அல்லின் நிறம்ஏற்கும் அடுப்புக் கரிதோற்கும்
— — — — — — —
— — — — — — —
— — — — — — —

---

# எழுத்திலிருக்கும் இறைவன்

(கொழும்புத்துறை 'கலைச்சுடர்')

முல்லைச் சிறுமுகை முத்துக்க ளின்நிரை
முந்தியொ ளிருஞ்செந் தாமரைகள்
கல்விக் கழகத் தடத்தில் மலர்கின்ற
காலையில் நிற்பர் கதிரவனாய்

தெய்வக் குழந்தைகள் தம்மை மனிதராய்ச்
செய்யும் பணிகளி னுலவரை
வையக வாழ்வினில் நன்னிலை யாக்கிட
வந்தங்கு நிற்பர் சிருட்டிகராய்

வீட்டில் வெளியிற் பழகிடும் பாலரின்
வெண்மனத் தேவிஷ நீர்தெளித்து
வாட்டி யழித்திடும் தீமை யெரித்து
வளர்த்திட நிற்பர் எரிநெருப்பாய்.

நெட்டுருச் செய்து நினைவை வளர்த்திடல்
நித்திய கல்வியின் றென்றுணர்ந்து
திட்டமு றுமனப் பண்பை யுயர்த்திடும்
சேவையில் நிற்பர் அருட்குருவாய்

அன்பு கருணை அகநிறை வுன்னத
ஆசை யெனும்குண மேவளர
இன்ப வழிகள் அமைத்துச் சிறுரை
அணைத்திட நிற்பா ரன்னையராய்

---

# என்கண் புரிந்த பாவம்

கண்களிவை புரிந்தபவ மிவைக ளென்று
கவிதைசெயில் ஆயிரமாய் விரியு மின்று
மண்ணில்வரு நரகமெனும் குடும்ப வாழ்வில்
மாய்கிறேன் மனைவிமிதித் துதைக்க அன்று
கண்ணழகைக் கயல்குவளை என்றே ஆம்பற்
கனிவாயைப் பவளமெனக் கண்ட கண்கள்
பெண்ணவளின் பேய்வெறியைக் கண்டி ருந்தால்
பெருநெருப்புத் தழலிலின்று வேகு வேனோ?

அன்னநடை மின்னலிடை அப்பிட் கன்னம்
அழகுமிழும் சிவப்புடலம் கண்டதாலே
வன்னமயிற் காதலியென் றணைந்தேன்! அந்தோ!
வருடமல்ல நாலைந்து கிழமைக் குள்ளே
அன்னமது கழுகாகி ஆந்தையாகி
அடங்காத புலியாகி அடர்த்தல் கண்டேன்?
"என்னடா கண்ணிலையோ? அழகுப் பேயோன்
றெடுத்தனையே!" எனஉலகம் ஏசு தம்மா.

# என்கண்கள்

கண்ணுனக் கிடற லாஞல் கடிந்ததைப் பிடுங்கி மோட்ச
விண்ணினிற் குருடாய்ச் சேர்தல் விழியுடன் நரகலோகம்
நண்ணுதல் தனினும் நன்றென் றேகிறிஸ் துரைத்தா ரந்தப்
புண்ணிய வாக்கென் வாழ்விற் புதுக்கருத் தமைத்த தம்மா.

ஒட்டிய கன்னம் கூனல் உடலமும் கிடங்குக் கண்ணும்
முட்டிபோல் வயிறும் கந்தை மூடவு மில்லா வாழ்வும்
எட்டியே எச்சிற்காக இழித்திடும் பல்லும் காணு
திட்டமாய் இருப்பேன் கண்கள் இழந்திடில் இன்ப மன்ரூ ?

பல்லெல்லாம் கழன்று சென்னி பால்நிற மயிராய்த் தேகம்
வில்லென வளைந்தும் கன்னி விளங்கிழை யாரைக் கண்டால்
மெல்லவே வாய்நீ ரூறும் வேட்கைசெய் எனது கண்கள்
நல்லதோர் ரிளமை எய்தும் அற்புதம் நவில லாமோ.

# பஞ்சாமிர்தம்

சிந்தை தெளிவிக்கும் தெய்வத் திருக்குறளுக்
கெந்தநூ லுண்டோ இணை.

ஆங்கில மோக அரும்பிணிக்கு நல்மருந்து
வாங்கிக் குறளருந்தி வாழ்

பூவிற் குறள்தருமால் பொன்றுப் புகழுடம்பு
தேவ ரமுதனைய தே.

அன்பின் அறமும் அரும்பொருளும் அவ்வீட்டி
னின்பமு மீவ திது.

வாழ்க தமிழ்மறையும் வண்டமிழும் பல்லாண்டு
சூழ்க குறளின் சுடர்.

———

# கடமைகள் நான்கு

வள்ளுவர் நாளில் வருவிருந் தோம்புகவே
உள்ளம் இனிக்க உரைப்போமே—உள்ள
"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

மனைபெருக்கி மெய்யாடை மண்ணி குறளை
அனைவோரும் கற்போம் அமைந்து—நினைவோம்
"புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்."

வையம் புகழ்புதுக்கும் வள்ளுவனார் பாதமிருந்
துய்ய அவர்குறளை ஓதுவோம்—மெய்யே
"அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

பாடி விளக்கிப் பகுத்துணர்த்தி யெங்கெங்கும்
நாடிக் குறளை நயந்துரைப்போம்—தேடி
"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

# இன்பக் குறள்

பண்டைத் தமிழ்வாழ்வைப் பாரில் குறளுருவில்
தண்டமிழில் வள்ளுவனுர் தந்தனரென்-றெண்டிசையும்
போற்றிப் புகழப் புதல்வர்களோ தாயைவிட்டு
வேற்றுநூல் கற்றல் வியப்பு

ஆண்டுக் கொருமுறையில் ஆரவா ரம்புரிந்து
நீண்ட பலநாள் நிதம்மறந்து—தீண்டாது
நல்லகுறள் என்று நாவாரப் பேசலிலே
இல்லையொரு மேன்மை இழிவு.

மேடைக்கும் பத்திரிகை மேன்மைக்கு மல்லஎங்கள்
நாடரிய வாழ்வு நலம்பெறவே—தேடிடுவோம்
அன்பும் அறனும் அருட்பொலிவும் தந்தருளும்
இன்பக் குறளை இனி.

# எழுதுக தேவா இன்றே !

['இம்' என்னு முன்னே எழுநூறும் எண்ணூறும் என்று பாடும் ஆற்றல் பெற்றவர் 'விடிவெள்ளி'. "தேவன்" வீடு சென்று அவரைக் காணுத பொழுது கணத்திலே பிறந்த கவிதை இது]

திணையளை விரந்த போது
திடுதிடென் றெழுதி அன்றே
பணையளை வனுப்பும் பண்பும்
பாசமும் கொண்ட தேவர் !
மணைவியார் வந்த பின்பு
மறதியும் சோம்பும் கொண்டே
எணை மிக வருத்தல் நன்ரே
எழுதுக தேவா இன்றே.!

# பிரார்த்தனை

…ணமார்க்கசபை
…ம். 1934

# பிரார்த்தனை

## விருத்தம்

**இராகமாலிகை.**

தூயரொடு சுத்தசபை சேவைதர வானுலகு
சூழவரு தேவ சுதனுய்
துப்புர வழிந்தநரர் ஒப்புரவு பெற்றருள
தொல்லுலகில் வெல்லை நகரில்
தாயுதர மேவுசிசு வாயருளியே குருசு
தந்த மரணக் குகையிலே
தங்கிவினை பங்கமுற எங்குமருள் பொங்குவர
சாபமுறு பாவ நரகம்
போயழிய யூதர்பரி சேயரொடு காய்பாவும்
பொந்தியு பிலாத் ததிபதி
போராடு மேரோது சேராதழுங்கவே
பொன்றுமுல கென்று முயர
ஆய ஒளி மேவிரவி போல இருள் பாறவரும்
அப்பனே யேசையனே
ஆவியி லெழுந்தருளும் மானுவேலான பெயர்
அத்தனே பரிசுத்தனே.

## விருத்தம்

வானிரவி மேவிவரு காலையினி லோரினிய
வனசமலர் முகமலர்தல் போல்
மன்னுபர லோகமுயர் எந்தைபர ருவியுற
வந்துநனி மேவு பொழுதில்
கானமையு மோர்குகையி லேதுயி லுமன்புருவின்
கண்ணனைய தண்ணருளினேன்
கர்த்தர்பரி சுத்தநச ரேயகுரு ராசனதி
காலையி லுயிர்த் தெழுந்தார்
மானனைய மகதலா மேரியிது கண்டுருகி
மற்றவர்க் குற்று ரைத்தாள்
மட்டிலா ஓகையொடு சிட்டர்குழு நாடெலாம்
மாருது கூறிநின்ற
தேனனைய செய்தியிது தேசமெல் லாம்பரவச்
செப்புவோம் நாடிநின்றே
செம்மைநல் வாழ்வுதர இமையி லுயிர்த்தருளும்
தேவாதி தேவனருளே

---

## விருத்தம்

இராகமாலிகை

தங்குபர லோககண முந்துமன மாரஒலி
    தந்துதுதி கூறிமகிழ
தாரகையும் வானமதில் நின்றுவழி காட்டிவரு
    சாத்திரிக ளுக்குரைக்க
மங்குபவ மோடுமர ணத்திகில் பிசாசிவைகள்
    மாய்ந்துவலி தேய்ந்துநலிய
மாநில முறும்பவ வினைத்தொடர் பறுந்துலக
    மன்பதைகள் சிந்தைகுளிர
எங்குமருள் தங்குகுரு சின்மகிமை யாலெம
    திரட்சணிய பாதைதெரிய
எங்கள்குரு யேசுபர மன்சிசுவ தாகவரும்
    இன்பநிலை யாலுலகெலாம்
பொங்குமொளி நங்கைமரி யின்வதன மேவவரு
    பொன்குழவி பாதமலரில்
போயருளிரந்துமன மெய்மொழியி னலெமது
    பூசைசெய நேருவமரோ.

தேவாதி தேவனருள் திவ்யமா மறையிலே
செப்புமுறை ஒப்ப நிறைவாய்
தேவுலக மேவுபரி சுத்தரும் கேருபீன்
சேராபீன் ஆயர் குலமும்
சாவாத நித்யபர தத்துவ மமைந்தநிலே
தாரணிக் கீந்துமகிழ
தாவீதி னூர்பெத்ல கேமிலே கன்னிமரி
தாயினருள் மேவுமடியில்
சீவாதி பதிஇயேசு திருச்சுதன் நரர்வடிவில்
சென்மித்த செய்திபாட
தீயவல கைக்குழாம் நரகமொடு மரணமும்
சிதறியே பதறியலற
நாவாரும் துதிமலர்கள் தூவிமுன் னணேமேவி
நாடிநின் றஞ்சலிப்போம்
நசரேய மனுவேல நரதேவ குருராச
நாயகனே நேய முறவே

நவரோஜ் கண்டசாப்பு

1

அன்புருவில் அவதரித்த அடியார்க்கு மடியேன்
அன்னைமரி சுதனரின் அடியார்க்கு மடியேன்
மன்னுருவாய் வந்தவர்தம் அடியார்க்கு மடியேன்
மாம்சமாகி நின்றவரின் அடியார்க்கு மடியேன்
தன்மகிமை துறந்தவர்தம் அடியார்க்கு மடியேன்
தாவீதின் மைந்தனிவர் அடியார்க்கு மடியேன்
வன்குகையில் பிறந்தபரன் அடியார்க்கு மடியேன்
வார்த்தையெனும் இயேசுசிறு பாலகனுக் காளே

2

ஆம்பல்வாய் வருங்குழவிக் கடியார்க்கு மடியேன்
ஆட்டுக்குட்டி யானவர்தம் அடியார்க்கு மடியேன்
தீம்பாலுக் கழுமதலை அடியார்க்கு மடியேன்
தித்திக்கும் தீங்கனியின் அடியார்க்கு மடியேன்
பாம்புதலை உடைத்தவர்தம் அடியார்க்கு மடியேன்
பாமாலைக் குளம்நெகிழ்வார் அடியார்க்கு மடியேன்
நாம்பரவும் நசரேயன் அடியார்க்கு மடியேன்
நகரான பெத்தலையின் நாய னுக் காளே.

சரசாங்கி — ஆதிதாளம்

பல்லவி

தோத்திரத் தோடே கூடிவந்தோமே,
தோத்திரம், நாதா, தோத்திரம், நாதா.

சரணங்கள்

1

கண்ணிமை போலே காத்து வந்தாயே
கர்த்தனே, உன்னைத் தோத்திரிப் போமே
தோத்திரம், தோத்திரம் ;
தேவகுமாரா, தோத்திரம், தோத்திரம்.

2

விண்ணிலுள் ளோனே பண்ணிசை மூலம்
வேண்டுதல் செய்தோம், ஆண்டருள்வாயே,
தோத்திரம், தோத்திரம் ;
தேவகுமாரா, தோத்திரம், தோத்திரம்.

3

பூமலர் தூவி பாமலராலே
மா மரிசேயா, நாமுனைப் போற்றி
தோத்திரம், தோத்திரம் ;
தேவகுமாரா, தோத்திரம், தோத்திரம்.

4

இன்னருளாலே இன்னல்கள் நீக்கும்
பொன்னகரோனே, நன்மை செய்தாயே,
தோத்திரம், தோத்திரம் ;
தேவகுமாரா, தோத்திரம், தோத்திரம்.

கானடா ஆதிதாளம்

1

உலகம் எல்லாம் ஒரு குடும்பம் ஆகுவோம்
உள்ள மென்னும் பெத்தலேயில் ஏகுவோம்
அலகில் மரி அன்னை தரும் பாலனை
அடி பணிந்து பரம கீதம் பாடுவோம்.

2

அன்பும் அருளும் உலகில் வெள்ளமாகவே
அந்தகார உலக அதிபன் சாகவே
உன்னதம் துறந்து வந்த மைந்தனை
உள்ளம் உருகிப் பணிந்துகொள்ள முந்துவோம்.

3

தேவ தேவன் பாலனுன நாளிலே
செப்புகின்ற பாவ உலகம் மீளவே
சீவ வார்த்தை கூறுவோம் இந்நாட்டிலே
தெய்வ நாம கீத இன்பப் பாட்டிலே.

---

## நாமவாளி

குராஞ்சி ஏகதாளம்

1

தூதர் வான சேனை பாடும் காலையான நேரம்
ஆவியோடு யிர்த்தருளும் ஆன கர்த்தன் வாழ்க !
தேவ குமாரனாய் சாவையும் வென்றே
மானிலத்தின் விண்ணமுதம் ஆன கர்த்தன் வாழ்க,!

2

பாவ சாபம் யாவும் போக தேவ சேனை வாழ்த்த
ஆவியோ டெழுந்தருளும் ஆன கர்த்தன் வாழ்க !
மாமரி சேயனாய் வானிலும் சென்றே
பாவிகளுக் கன்புமழை யான கர்த்தன் வாழ்க,!

3

கானகீதம் தூதர்பாட காவலாளர் ஓட
வானமே லெழுந்தகுரு வான கர்த்தன் வாழ்க,!
தூதரும் கூறவே மாதர்கள் கண்டார்
தூயவருக் கின்பநிலை யான கர்த்தன் வாழ்க,!

4

ஆவியான தீயின் நாவு மேவி சீஷர் ஏத்த
தேவனா யிறங்கிவரும் இயேசு கர்த்தன வாழ்க !
மாசபை ஆயனாய் மானிடர்க் கென்றே
பாதகருக் கின்பநிழல் இயேசு கர்த்தன் வாழ்க,!

சங்கராபரணம் ஆதிதாளம்

## கண்ணிகள்

ஏக திரித்துவமே—தெய்வ
ஆவியின் மாமழையே—உள்ளத்
தூய்மையின் ஆரணமே—எங்கள்
மாசபை மீதினில் ஆதவனுயொளிர், —ஏக

மேலறை வீட்டினிலே—அன்று
மேவு மக்கினி யுருவாய்—வந்த
ஆவியின் நாவுகளாய்—இன்றும்
ஆகிட நீயருள், ஆவியின் நாதனே, —ஏக

பாவ மழிந்திடுமே—துன்ப
சாவு மொழிந்திடுமே—தமது
ஆவி சொரிந்திடுவார்—எங்கள்
தேவ குமாரனி னுவியி னுலுற —ஏக

ஞானமளித்திடுவோர்—இன்று
நாடிய பணி எதிலும்—உயர்
வான மிருந்துறுவார்—எங்கள்
வாழ்வுயர் வாகிடத் தூய்மை யளித்திடும் —ஏக

ஆனந்தபைரவி ஆதிதாளம்

பல்லவி

தேவா, சபைக்குயிர் ஈவாய்
தெய்வருள் பொழிவாய், தேவ சுத்தாவியே.

சரணங்கள்

1

தீவந்த நாவுகளாய்
வா எங்கள் உள்ளில் சேர்ந்து
ஆவியின் மழைதாராய்,
ஆனந்த வான் பரனே — தேவா

2

வா, எங்கள் ஆறுதலே,
வான் நின்று வந்த தேவே
ஆவியின் மழை தாராய்,
ஆனந்த வான் பரனே. — தேவா


3

பாவத்தின் பாரத்திலே
வீழ்கின்ற எங்கள் வாழ்வில்
ஆவியின் மழை தாராய்,
ஆனந்த வான் பரனே. — தேவா

4

சோர்கின்ற நேரத்திலே
சீவன் தா இன்ப மாக்கி
ஆவியின் மழை தாராய்,
ஆனந்த வான் பரனே. — தேவா

நிலையம் ★
ரம்பம்: 1934
சன்மார்க்க



அங்கமெலாந் தங்கமெனத் திகழ்ந்தாய் அன்பின்
அலைகடலாய் உந்தனுளந் திறந்தாய் வானத்
திங்களெனக் கருணையொளி பொழிந்தாய் வாழ்வில்
திசையனைத்தும் சேவைசெயப் பறந்தாய் எங்கும்
பொங்குமலர்ப் புன்னகையைச் சொரிந்தாய் யேசு
போதனையாம் வாழ்வதனிற் கலந்தாய்; இன்றே
எங்களுயிர் கவர்ந்தோடி மறைந்தாய் ஐயா!
ஈசனடி நீழலிலே இன்பங் காண்பாய்.

— நண்பன் விக்றர்

Cover Printed at Kalaivani Printing Works, Jaffina.